# மே – 13 – ஆண்டவரின் விண்ணேற்பு ஞாயிறு

## தூய பாத்திமா அன்னை

## "நீங்கள் எருசலேமை விட்டு நீங்க வேண்டாம்"–திபணி1:9

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 1 : 1 – 11

தெயோபில் அவர்களே, இயேசு தாம் தெரிந்துகொண்ட திருத்தூதர்களுக்கு அவர்கள் தூய ஆவியின் துணையோடு செய்யவேண்டியவற்றைக் குறித்து அறிவுறுத்தியபின் விண்ணேற்றமடைந்தார்.விண்ணேற்றமடைந்த நாள்வரை அவர் செய்தவை, கற்பித்தவை யாவற்றையும் குறித்து எனது முதலாம் நூலில் நான் எழுதினேன்.இயேசு துன்புற்று இறந்தபின்பு நாற்பது நாள்களாக அவர்களுக்குத் தோன்றி, இறையாட்சியைப் பற்றிக் கற்பித்தார் பல தெளிவான சான்றுகளால் தாம் உயிரோடு இருப்பதைக் காண்பித்தார்.அவர்களோடு சேர்ந்து உண்ணும்போது அவர்களிடம், "நீங்கள் எருசலேமை விட்டு நீங்கவேண்டாம். என்னிடமிருந்து கேட்டறிந்த தந்தையின் வாக்குறுதி நிறைவேறக் காத்திருங்கள்.யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார். நீங்களோ இன்னும் சிலநாட்களில் தூய ஆவியால் திருமுழுக்குப் பெறுவீர்கள்" என்றுகூறினார்.பின்பு அங்கே கூடியிருந்தவர்கள் அவரிடம், "ஆண்டவரே, இஸ்ராயேலுக்கு ஆட்சியுரிமையை மீண்டும் பெற்றுத்தரும் காலம் இதுதானோ?" என்றுகேட்டார்கள்.அதற்கு அவர், "என்தந்தை தம் அதிகாரத்தால் குறித்து வைத்துள்ள நேரங்களையும்இ காலங்களையும் அறிவது உங்களுக்கு உரியது அல்ல. ஆனால் தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப்பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" என்றார்.இவற்றைச் சொன்னபின்பு, அவர்கள் கண்கள் முன்பாக அவர் மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார். மேகம் ஒன்று அவரை எடுத்துச்சென்று அவர்கள் பார்வையிலிருந்து மறைத்துவிட்டது. அவர் செல்லும்போது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அப்போது வெண்ணுடை அணிந்த இருவர் தோன்றி, "கலிலேயரே,நீங்கள் ஏன் வானத்தைப் பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்? இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததைக் கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்" என்றனர்.

**பதில்பாடல் :** எக்காலம் முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ஆண்டவர்.

## இரண்டாம் வாசகம் : எபேசியர் 4 : 1 – 13

சகோதர சகோதரிகளே! ஆண்டவர் பொருட்டு கைதியாக இருக்கும் நான் உங்களைக் கெஞ்சிக்கேட்கிறேன் நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள்.முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி,அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழு முயற்சி செய்யுங்கள்.நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பது போல, உடலும் ஒன்றே. தூய ஆவியும் ஒன்றே.அவ்வாறே ஆண்டவர் ஒருவரே நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே. திருமுழுக்கு ஒன்றே.எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே. அவர் எல்லாருக்கும் மேலானவர். எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர் எல்லாருக்குள்ளும் இருப்பவர்.கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப்பட்டு உள்ளது. ஆகையால்தான், "அவர் உயரே ஏறிச்சென்றார் அப்போது, சிறைப்பட்ட கைதிகளை இழுத்துச்சென்றார் மனிதருக்குப் பரிசுகளை வழங்கினார்" என்று மறைநூல் கூறுகிறது. "ஏறிச்சென்றார்" என்பதனால் அதன் முன்பு மண்ணுலகின் கீழான பகுதிகளுக்கு அவர் இறங்கினார் என்று விளங்குகிறது அல்லவா?கீழே இறங்கியவர்தான் எங்கும் நிறைந்திருக்கும்படி எல்லா வானுலகங்களுக்கும் மேலாக ஏறிச்சென்றவர்.அவரே சிலரைத் திருத்தூதராகவும் சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியாளர்களாகவும் ஏற்படுத்தினார்.திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவும் இவர்களை அவர் ஏற்படுத்தினார்.அதனால் நாம் எல்லாரும் இறை மகனைப் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம். கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறுமளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம்.

## நற்செய்தி : மாற்கு 16 : 15 - 20

அக்காலத்தில் இயேசு பதினொருவருக்குத் தோன்றி அவர்களை நோக்கி, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கைகொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப்பெறுவர் நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர் அவர்கள் என்பெயரால் பேய்களை ஓட்டுவர் புதிய மொழிகளைப் பேசுவர். பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்" என்று கூறினார். இவ்வாறு அவர்களோடு பேசிய பின்பு ஆண்டவர் இயேசு விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார். அவர்கள் புறப்பட்டுச்சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர். ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு, நிகழ்ந்த அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார்.)

**தியானம்:** இன்றைய நாளில் நமதாண்டவர் இயேசுவின் விண்ணேற்பு விழாவோடு, பாத்திமா அன்னையின் விழாவையும் நினைவுகூருகிறோம். இயேசு தனது சீடர்களை நற்செய்திக்கு அனுப்பியதோடு தனது கடமை நிறைவேறிவிட்டதென்று ஒதுங்கிவிடவில்லை. மாறாக, சீடர்களோடு இருந்து அவர்களை உறுதிப்படுத்துவதால், இயேசு நம்மை விட்டு வெகுதூரம் செல்லவில்லை மாறாக, நம்மில் ஒருவராக இருந்து செயலாற்றுகிறவர் எனப்படும் உண்மை தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான உண்மையையே அன்னை மரியாவும் தனது பாத்திமா தரிசனத்தில் மூன்று சிறுபிள்ளைகள் வழியாக எமக்கு வெளிப்படுத்தினார். இயேசுவின் பிரசன்னம் இந்த உலகத்தில் அவர் வாழ்ந்ததோடு முடிந்துவிடவில்லை. அவருடைய பணி உயிர்ப்போடு நிறைவுபெறவில்லை. அவருடைய கடமை விண்ணேற்றத்தோடு நின்றுவிடவில்லை. தொடர்ந்து தன்னைத் தேடுகிற ஒவ்வொருவரின் வாழ்விலும் ஒளியேற்றி, தனது பணியைச்செய்பவர்களை உறுதிப்படுத்துகிறார். துவழும் போதெல்லாம் தாங்கிப்பிடித்துத் தோள் கொடுக்கிறார். இயேசுவின் சீடர்களது வாழ்க்கையில் அவர்களுடைய துணிவிற்கு இயேசுவின் வல்லமைதான் காரணம் என்பதனை இறையியலாளர்கள் பலரோடு விசுவாசிகள் ஒவ்வொருவரும் தெரிவிக்கின்றனர். கடவுளது எல்லையற்ற அன்பினால் தன் ஒரே மகனை நமக்கு மீட்பராக அளித்தார். அவரிடத்தில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும் இதுவே இயேசு கொணர்ந்த நற்செய்தியின் சுருக்கம் என்பதனை, அன்னை மரியா பாத்திமாவில் நாம் கடவுளின் பிள்ளைகளாக இருப்பதால் கடவுள் காட்டும் வழியில் நடந்து அவரிடத்தில் நிலையான அமைதியையும், மகிழ்ச்சியையும் கண்டுகொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளதாக கருத இடமுண்டு. இவ்வாறான செய்தியை இயேசு ஒருசில மனிதர்களுக்கு மட்டுமே அறிவிக்கவேண்டிய இரகசியமாகக் கருதவில்லை. மாறாக, அனைத்து மக்களுக்கும் அறிவிக்கப்படவேண்டும் என்பதனால், அவர் தம் சீடர்களுக்கு "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" என்கிறார். இயேசுவின் சீடர்கள் ஆற்றவேண்டிய முக்கிய பணி "நற்செய்தி அறிவித்தல்" ஆகும். இது வெறும் வார்த்தைகளால் நடைபெறுகின்ற நிகழ்வு அல்ல. மாறாக, நற்செய்தி என்பது ஒரு வாழ்க்கை முறை. இயேசுவின் போதனையை உள்ளத்தில் ஏற்று, அதை வாழ்வில் கடைப்பிடிப்பதே நற்செய்தி அறிவிப்பின் முக்கிய அம்சம். இதையே நாம் "சான்று பகர்தல்" என்கிறோம்.இயேசுவின் பணியை நாம் அனைவருமே முன்னெடுத்துச்செல்ல வேண்டும். இறைப்பணியாளர்கள் மட்டுமல்ல, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அறிக்கையிடுகிற அனைவருமே நற்செய்தியின் பணியாளர்கள்தான். இயேசு நம்மிலே தொடர்ந்து செயலாற்ற, நம்மையே முழுவதுமாக பாத்திமா அன்னையின் வழியாக ஆண்டவர் இயேசுவிடம் கையளிப்போம்.